# DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.103/2019**

**PW-2**

**Date :-25.09.2025**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கீதா | Caste | |
| க/பெ. | திரு.அனீஷ்குமார் | Calling | காவல் உதவி ஆய்வாளர் |
| Village | ஸ்ரீரங்கம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 40 /2025 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

நான் தற்சமயம் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . இதற்குமுன் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திருமதி . சிந்துநதி அவர்களின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் வழக்கின் காலதாமதத்தை கருத்தில் கொண்டு வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் . கடந்த 10.11.2015 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திருமதி . சிந்துநதி பணியில் இருந்தபோது திருச்சி நெ.1 டோல்கேட் காந்தி நகரை சார்ந்த மாரிமுத்து மகன் ரவிச்சந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று ஸ்ரீரங்கம் காவல் நிலைய குற்ற எண். 1139/2015 சட்டபிரிவு 387 506(2) ,இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் . **அந்த புகார் ஆவணம் அ .சா.ஆ-2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.அந்த முதல் தகவல் அறிக்கை அ .சா.ஆ.3 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் அன்றையதினேம இரவு 20.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதீஷ் , ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டுபார்வை மகஜர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் . **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ .சா.ஆ.5 ஆக குறியிடுசெய்யப்டுகிறது.** பின்னர் புகார்தாரர் எதிரியின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது எதிரி சம்பவ இடத்தில் விட்டுச்சென்ற சுமார் 19 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்றை ஆஜர் செய்துள்ளார். பின்னர் மேற்படி வழக்கு சொத்தான சுமார் 19 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்றை படிவம் –91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **அந்த படிவம் –91 (RP.No.257/2016)அ.சா.ஆ.6 ஆக குறியிடசெய்யப்படுகிறது. வழக்கு சொத்தான சுமார் 19 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்று அ.சா.பொ.1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில்ஸ்ரீரங்கம் வடக்கு தேவி தெரு பூ மார்க்கெட் முன்பு நின்றுகொண்டிருந்த எதிரி ஆனந்தகுமார் என்பவரை கடந்த 10.11.2015 தேதி 21.00 காரணம் கூறி கைது செய்தபோது எதிரி அளவுக்கு அதிகமான மது போதையில் இருந்ததால் எதிரியை ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி பின்னர் 11.11.2015ம் தேதி பகல் 12.00 மணிக்கு மருத்துவரால் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பிறகு எதிரியை நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து உரிய சட்ட நடைமுறைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். **ஸ்ரீரங்கம் அரசு மருத்துவனை மருத்துவர் வழங்கிய CERTIFICATE OF DURNKENNERS ஆவணம் அ.சா.ஆ.7 ஆக குறியிடுசெயய்ப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ரவிச்சந்திரன் ,செல்வராஜ், சதீஷ் ஆணந்த் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்கமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் உதவி ஆய்வாளர் திருமதி . சிந்துநதி அவர்கள் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது

WWW.Web

மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு கோப்புகளின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான் . சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல . காவல் உதவி ஆய்வாளர் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Sd/–xxxx

Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made her signature

Sd/–xxxx

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

Advocate